செய்தி வெளியீடு எண் :31 நாள் : 17.06.2020

# தமிழ்நாடு வனத்துறை

## தேனி வனக்கோட்டம், தேனி

### வனத்துறை செய்திக் குறிப்பு

-----

தேனி மாவட்டம், தேவாரம் மற்றும் கோம்பை வனப்பகுதியில் ஏற்படும் மனித-யானை மோதலை தவிர்த்து, பொதுமக்களை காக்கும் பொருட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வனத்துறை மூலம் கீழ்க்கண்டவாறு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாலை 5.00 மணி முதல் காலை 7.00 மணி வரை வனப்பகுதியை ஒட்டியுள்ள பட்டா நிலங்களில் பொதுமக்கள் / நில உரிமையாளர்கள் / கூலியாட்கள் / கால்நடை மேய்ப்பவர்கள் நடமாடுவதை தவிக்குமாறும், மாலை 5.00 மணிக்கு முன்னதாகவே மேற்படி பகுதிகளை விட்டு வெளியேறிட வேண்டும். வனப்பகுதியை ஒட்டிய விளைநிலங்களில் ஆடு / மாடுகள் பட்டியமைப்பதை தவிர்க்க வேண்டும். யானை நடமாடக்கூடிய வனப்பகுதிகள் மற்றும் ஓடைகளில் மாட்டு வண்டி / டிராக்டர் / இரு சக்கர வாகனங்களில் பொதுமக்கள் யாரும் செல்ல வேண்டாம்.

மலையோர தோட்டக்காவலாளிகள் / விவசாயிகள்/ கால்நடை மேய்ப்பவர்கள் தற்காலிக கூடாரங்களில் தங்குவதை தவிர்த்து பாதுகாப்பான கட்டிடங்களில் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் சுய பாதுகாப்புடன் தங்க வேண்டும். அவ்வாறு தங்கும் போது, முடிந்தவரையிலும் விளைநிலங்களிலுள்ள கட்டிடங்களில் இரவு நேரங்களில் அதிகளவு மின் விளக்குகளை ஒளிரச் செய்ய வேண்டும்.

சாக்கலூத்து, பதினெட்டாம்படி, குதிரைபாஞ்சான் மற்றும் இராமக்கல் மெட்டு போன்ற அனுமதிக்கப்பட்ட வன வழி பாதைகளை இரண்டு மாதங்களுக்கு பயன்படுத்துவதை பொதுமக்கள் தவிர்த்திட வேண்டும்.

மேலும், பொதுமக்களுக்கு மேற்கூறிய அறிவுரைகளை எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்டத்தின் பல்வேறு துறை அலுவலர்களைக் கொண்டு தேவாரத்தில் மாவட்ட வன அலுவலர் அவர்கள் தலைமையில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுரை / வழிகாட்டல்களை தவறாது கடைபிடித்து பாதுகாப்புடன் வாழ வலியுறுத்தப்பட்டது.

சாக்கலூத்து, பதினெட்டாம்படி, குதிரைபாஞ்சான் மற்றும் இராமக்கல் மெட்டு போன்ற அனுமதிக்கப்பட்ட **வன வழி பாதைகளை இரண்டு மாதங்களுக்கு பயன்படுத்துவதை பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் தவிர்த்திடுமாறு வலியுறுத்திய நிலையிலும், 17.06.2020 ம் இரண்டு பேர் தேவாரம் காப்புக்காடு பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த காட்டு யானையிடம் சிக்கினர்**. அங்கிருந்து தப்பியோடும் போது ஒருவர் சிறு காயங்களுடனும் மற்றொருவர் காயங்கள் ஏதுமின்றியும் தப்பினர்.

நேற்றைய சம்பவத்தினை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோருடன் கலந்து ஆலோசனை செய்து, பொதுமக்களின் பாதுகாப்பை கருதி **சாக்கலூத்து, பதினெட்டாம்படி, குதிரைபாஞ்சான் மற்றும் இராமக்கல் மெட்டு போன்ற அனுமதிக்கப்பட்ட வன வழி பாதைகள் மறு உத்தரவு வரும் வரை மூடப்படுகிறது**. எனவே பொதுமக்கள் இந்த பாதைகளை பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மீறுவோர் மீது சட்ட விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவிக்கப்படுகிறது.



எனவே, வனப்பகுதியை ஒட்டிய பட்டா நிலங்களில் யானை நடமாட்டம் தென்பட்டால் உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும், பொதுமக்களின் நலன் கருதி, வனத்துறை அவ்வப்போது வழங்கும் அறிவுரைகளை தவறாது பின்பற்றி பாதுகாப்புடன் வாழ தேனி மாவட்ட வனத்துறை கேட்டுக்கொள்கிறது.

**இவண்,**
**தேனி மாவட்ட வனத்துறை.**

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**